(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

இல. 9.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2024 மார்ச் 07, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

612/2024

கௌரவ ஜயந்த சமரவீர,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1978 ஆம் ஆண்டளவில் இலங்கை அரசாங்கம் வசமிருந்த அரச கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள், சபைகள் மற்றும் ஏனைய உற்பத்தி, சேவை நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் பெயர் மற்றும் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி/ வழங்கப்பட்ட சேவை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுக்கு மத்தியில் இன்றளவில் இயங்கி வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திலும் காணப்படுகின்ற அரசாங்கத்தின் உடைமையுரிமை சதவீத அடிப்படையில் தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட உற்பத்தி/சேவை நிறுவனங்களுள் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் பெயர் மற்றும் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி/ வழங்கப்பட்ட சேவை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுள் இன்றளவில் வங்குரோத்தடைந்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

635/2024

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023 ஆம் ஆண்டில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மனிதப் படுகொலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அது தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை யாது;

(iii) அதில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2023 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டுள்ள போதைப்பொருளின் அளவு யாது;

(ii) மேற்படி போதைப் பொருள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) இலங்கைப் பொலிஸாரினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 'யுக்திய' வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1089/2024

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நெல் உட்பட ஏனைய பயிர்களின் அறுவடைகளைப் பெற்றுக்கொள்வதற்காக இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துவது தற்போது அதிகரித்துள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அறுவடைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பயன்படுத்தப்படும் இயந்திர சாதனங்கள் தொடர்பில் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(iii) இன்றேல், எதிர்காலத்தில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) விவசாய இயந்திர சாதனங்களுக்கென அறவிடப்படுகின்ற கட்டணங்கள் அதிகரித்துள்ள காரணத்தினால் விவசாயிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஒரு ஏக்கர் காணிக்கு/நெல் புசல் ஒன்றுக்கு தேவைப்படும் இயந்திர சாதனங் களுக்கு அறவிடக்கூடிய உயர்ந்தபட்ச கட்டணத்தை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், உயர்ந்தபட்ச கட்டணத்தை நிர்ணயிக்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1125/2024

கௌரவ டீ. வீரசிங்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கை போக்குவரத்துச் சபையின் வசமுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றுள் சேவையில் ஈடுபடுத்தக்கூடிய நிலையில் உள்ள பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த பேருந்துகளுள், பழுதுபார்த்ததன் பின்னர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) 'சிசு செரிய' சேவையை முன்னெடுப்பதற்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கை போக்குவரத்துச் சபைக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கையானது ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1145/2024

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி, வெலிகெபொல பிரதேச செயலகப் பிரிவின் கலாசார நிலையம் நீண்டகாலமாக பழுதடைந்துள்ளதென்பதையும்;

(ii) அதனை சீரமைப்பதற்கு இதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கலாசார நிலையத்தை சீரமைப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1149/2024

கௌரவ லலித் வர்ண குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை, ஹொரணை மற்றும் மத்துகம ஆகிய ஒவ்வொரு கல்வி வலயத்திலுமுள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கல்வி வலயத்திலும் இன்றளவில் நிலவும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அண்மையில் கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டபோது, மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கல்வி வலயத்திற்கும் நியமிக்கப்பட்ட தமிழ் மொழிமூல ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சுமார் 620 மாணவர்கள் கல்வி கற்கும் களுத்துறை கல்வி வலயத்தில் அமைந்துள்ள களு/அல்-ஹசனியா மகா வித்தியாலயத்தில் கணிதப் பாட ஆசிரியர் வெற்றிடம் உள்ளிட்டதாக இன்றளவில் 15 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பாடசாலையில் போதுமானளவு கட்டட வசதிகள் இல்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) கொடைவள்ளல்களின் ஒத்துழைப்புடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் 12 வகுப்பறைகளைக் கொண்ட மூன்று மாடி கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் தற்பொழுது இறுதிக் கட்டத்தில் உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி 12 வகுப்பறைகளுக்கும் மேசை மற்றும் கதிரை வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1151/2024

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மிளகு, கிராம்பு, ஏலக்காய் மற்றும் கறுவாப்பட்டை போன்ற சிறு ஏற்றுமதிப் பயிர்ச் செய்கையை கிராமிய மட்டத்தில் மேம்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) சிறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கையானது எதிர்காலத்தில் மேம்படுத்தப்படவுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) சிறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கைக்காக பசளை வழங்கும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(v) சிறு ஏற்றுமதிப் பயிர் கிராமங்களை அமைக்கும் வேலைத்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1246/2024

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் 'செனல் 4' இனால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவின் முன்னேற்றத்தினையும்;

(ii) இந்தச் சபைக்கும் பொதுமக்களுக்கும் மேற்குறிப்பிட்ட ஆணைக்குழுவின் அறிக்கை கிடைக்கச் செய்யப்படும் திகதியினையும்;

(iii) விசாரணையில் எவ்வித முன்னேற்றமும் இல்லையெனின் அதற்கான காரணங்களையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட தாக்குதல்கள் தொடர்பில் 'செனல் 4' முன்வைத்த இதே குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காகப் பாராளுமன்ற விசேட குழுவொன்றினை நியமித்தமைக்கான காரணங்களையும்;

(ii) மேற்படி குழுவின் முன்னேற்றத்தினையும்;

(iii) எவ்வித முன்னேற்றமும் இல்லையெனின் அதற்கான காரணங்களையும்;

(iv) மேற்படி குழுவின் பரிமாணங்களையும்?

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) குறிப்பிட்ட தாக்குல்கள் பற்றிய ஒரு சுயாதீனமான, சர்வதேச விசாரணைக்கான அழைப்புக்களை அரசாங்கம் மீண்டும் மீண்டும் புறக்கணித்தமைக்கான காரணங்களையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

1251/2024

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு.நிலந்த ஜயவர்தன தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் யாவை என்பதையும்;

(ii) அவர் பொலிஸ் நிர்வாகப் பிரிவின் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி, மேற்படி பதவிக்கு அவர் பரிந்துரை செய்யப்பட்ட திகதி மற்றும் குறித்த பதவிக்கு அவரைப் பரிந்துரை செய்த நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள மேற்படி உத்தியோகத்தரை குறித்த பதவிக்கு நியமிப்பதற்கு ஏதுவாக அமைந்த விடயங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நியமனம் தொடர்பில் மீண்டும் ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1280/2024

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை காணப்படுகின்ற மின் பாவனையாளர்களின் முழு எண்ணிக்கையும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட மின் பாவனையாளர்களின் எண்ணிக்கையும் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீள மின் இணைப்பை வழங்கியதன் மூலம் இலங்கை மின்சார சபை ஈட்டிய வருமானம் வருட வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மின் அலகொன்றின் விலை தொடர்பாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை இருக்குமாக. மு.ப. 10.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல.2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2024 மார்ச் 19 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

வங்கித்தொழில் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதிய 2355/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.12.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுகப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுகப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவுடனும் இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகார சபைகளுடனான கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு 2023 நவம்பர் 17 ஆம் திகதிய 2358/70 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 (3) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் (பதிற்கடமை) விதிக்கப்பட்டு, 2023 செப்டெம்பர் 21 ஆம் திகதிய 2350/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— சேர் பெறுமதி வரிச்சட்டத்தின் கீழ் கட்டளை,— 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர் பெறுமதி வரிச் சட்டத்தின் 2அ ஆம் பிரிவின் கீழ் சேர் பெறுமதி வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2023 டிசம்பர் 19 ஆம் திகதிய 2363/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*16.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நஞ்சு வகைகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (218 ஆம் அத்தியாயமான) நஞ்சு வகைகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் 77அ(6) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 80 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 நவம்பர் 27 ஆம் திகதிய 2360/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் VII ஆம் பகுதியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூன் 28 ஆம் திகதிய 2338/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*18.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 21, 22, 23, 24 மற்றும் 24அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஒக்டோபர் 05 ஆம் திகதிய 2352/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*19.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரைகளுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்களைப் பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 செப்டெம்பர் 07 ஆம் திகதிய 2348/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*20.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் விதப்புரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2352/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் விதப்புரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2352/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இராஜதந்திர சிறப்புரிமைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இராஜதந்திர சிறப்புரிமைச் சட்டத்தின் 4 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் காடு வேளாண்மை ஆராய்ச்சிக்கான சர்வதேச நிலையத்திற்கும் (ICRAF) இடையிலான புரவலர் நாட்டு உடன்படிக்கை IV, V, VI, IX, X, XI, XII, XIII, XIV, XV மற்றும் XVI இன் விதிமுறைகளைச் செயற்படுத்துவது தொடர்பான வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 செப்டெம்பர் 08 ஆம் திகதிய 2348/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

23.
சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.
புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.
ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.
சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.
சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.
அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.
இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.
விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.
முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.
இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.
திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.
திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.
தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.
சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.
அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.
இலங்கை வரைதல் தொழினுட்பவியலாளர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.